கல்முனை மாநகர சபை
அம்பாரை மாவட்டம்

------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஒக்டோபர் 12 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 31 ஆந் திகதி முதல்வருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து கல்முனை மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் விலைமதிப்புத் திணைக்களத்தினால் 32 மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 43,080,000 மொத்த தொகையாக காணப்பட்டபோதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 11,152,013 தொகையாகக் காட்டப்பட்டமையினால் நிலையான சொத்து மற்றும் திரண்ட நிதி என்பன ரூபா31,927,987 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

(ஆ) பேரேட்டின்படி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 40,259,540 தொகையான முற்பணக் கணக்கு மீதியானது 2017 சனவரி 01 இல் ரூபா 38,932,934 ஆக முன்கொண்டுவரப்பட்டதனால் அம் மீதியானது ரூபா 1,326,606 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ) பெற்றுக்ககொள்ளப்பட்ட மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் காரைதீவு பிரதேச சபைக்கு மாநகர சபையினால் செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா 2,854,802 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ‘‘நனசல’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 04 கணனிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 1987 முதல் நிலுவையாகக் காணப்பட்டு வரும் பொதுச்சந்தைக் குத்தகை ரூபா 12,314,393, இறைச்சிக் கடை குத்தகை ரூபா 7,661,912, கடை வாடகை ரூபா 13,657,443 என்பவற்றை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) 1996 முதல் நிலுவையாகக் காணப்பட்டு வரும் துவிச்சக்கர வண்டி மற்றும் வாகன பாதுகாப்பு குத்தகை ரூபா 3,394,613 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| பொதுச்சந்தைக் குத்தகை நிலுவை | 12,314,393 | குத்தகை நிலுவைப் பதிவேடு |
| வைப்புக்கணக்கு மீதி | 31,742,610 | வைப்பு இணக்கக் கூற்று மற்றும் காலப்பகுப்பாய்வு |

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252 பிரிவு 218 | நிர்வாகம் தொடர்பாக ஆணையாளரினால் ஒவ்வொரு நிதி ஆண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டிய விபரமான அறிக்கை 2017 ஆம் ஆண்டுகளிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கை | மீளாய்வாண்டில் வருடாந்த பொருட்கணிப்பீட்டு சபையின் சிபார்சின்படி அழிக்கப்படவேண்டிய 1294 நூல்நிலைய புத்தகங்களும் விற்பனை செய்யப்படவேண்டிய 595 இருப்புப் பொருட்கள் தொடர்பில் 2018 ஒக்டோபர் 19 ஆம் திகதி வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன், மெய்மையாய்வுச் சபை அறிக்கைப் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வோர் உள்ளூராட்சி சபைகளும் நகர அபிவிருத்தி எனும் பெயரில் வங்கி கணக்கொன்றை ஆரம்பித்து சேவைக் கட்டணங்களும் தண்டப்பணங்களும் மேற்படி கணக்கில் வைப்பிலிடவேண்டுமென அறிவுறுத்தப் பட்டிருந்தும் மாநகர சபையானது நகர அபிவிருத்தி எனும் பெயரில் வங்கி கணக்கொன்றை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தவில்லை. |

2. நிதி மீளாய்வு
--------------------------

2.1 நிதி விளைவுகள்
---------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா13,431,998 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 21,251,122 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 7,819,124 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்
--------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்
---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) வீதவரிகளும் வரிகளும் | 11,100 | 12,174 | 11,592 | 91,567 | 11,100 | 15,280 | 18,309 | 90,985 |
| (ii) வாடகை | 19,980 | 16,637 | 15,621 | 38,792 | 21,410 | 15,530 | 14,840 | 36,505 |
| (iii) உரிமைக் கட்டணம் | 9,705 | 7,254 | 7,254 | - | 6,885 | 8,735 | 8,735 | - |
| (iv) ஏனைய வருமானம் | 43,255 | 24,295 | 24,295 | - | 34,481 | 36,715 | 36,715 | - |

2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்
------------------------------------------------------------------

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 189,121,226 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 58,762,245 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 31% ஆக காணப்பட்டிருந்தது.

2.2.3 ஆதன வரி
-----------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் மாநகர சபையினால் ஆதன வரி அறவிடுவதற்கான அறிவித்தல் படிவம் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்காததுடன் ஆதன வரிப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதனவரியை அறவிடுவதற்காக நியமிக்கப்பட்ட 08 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 2.5 மில்லியன் சம்பளமாக வழங்கப்பட்ட போதிலும் அவர்களால் மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடவேண்டிய ரூபா 102.1 மில்லியன் ஆதன வரியில் 10 சதவீதமான ரூபா 10.5 மில்லியன் மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. மேலும், இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆதன வரி செலுத்தத் தவறிய ஆதன உரிமையாளர்களுக்கு எதிராக மாநகர சபையினால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 சந்தைக் கடை வாடகைக

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபைக்குச் சொந்தமான பொதுச்சந்தையில் 503 கடைகளில் 64 கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களிடமிருந்து நிலுவை வாடகை ரூபா 5,130,143 தொகை 7 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) இப்பொதுச் சந்தைக்கு அண்மித்துள்ள தனியார் கடைகள் குறைந்தது மாதாந்தம் ரூபா 10,000 தொடக்கம் ரூபா 20,000 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற போதிலும், மாநகர சபைக்குச் சொந்தமான இக்கடைகள் புதிய விலை மனுக்களை கோராது 1980 ஆம் ஆண்டு தொடக்கம் மாதாந்தம் ரூபா 300 தொடக்கம் ரூபா 2,500 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கிவருவதனால் சபை அண்ணளவான ரூபா 60 மில்லியன் தொகையை வருடாந்தம் இழந்து வருகின்றது.

(இ) மாநகர சபையினால் ஒற்றுமை சதுக்கத்தில் உள்ள 24 கடைகளில் 18 கடைகளை மீளாய்வாண்டில் ரூபா 1,614,000 வாடகைக்கு வழங்கப்பட்ட போதிலும், 2018 ஒக்டோபர் 18 வரை அத்தொகையில் ரூபா 1,272,500 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபைக்கு மாநகர சபையின் JCB இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதற்கான வாடகைக் கட்டணம் ரூபா 76,500 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.5 வியாபார உத்தரவுப்பத்திர கட்டண அறவீடு

------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் 2,778 வியாபார நிலையங்களிடமிருந்து ரூபா 9,000,000 தொகை வியாபார உத்தரவுப்பத்திரக் கட்டணமாக அறவிட பாதிடப்பட்ட போதிலும் 2018 ஒக்டோபர் 18 ஆம் திகதிவரை 1,501 வியாபார நிலையங்களிடமிருந்து ரூபா 6,918,625 தொகையே அறவிடப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் உத்தரவுப்பத்திர அனுமதி பெறப்படாத 1,277 வியாபார நிலையங்களுக்கு எதிராக சபையினால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபையின் தீயணைப்புப் படைப்பிரிவின் பாதுகாப்பு உபகரணங்கள், தீயணைப்பு கருவிகள் மற்றும் நீர்குழாய் பொருத்துக்கள் என்பன ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக திருத்தப்படாது மக்களுக்கு குறித்த நேரத்தில் சேவையை வழங்கமுடியாதுள்ள நிலைமையில் காணப்பட்டிருந்தது.

(ஆ) மாநகர சபையில் 243 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கடமைபுரிகின்ற போதிலும், 09/2009 ஆம் இலக்க 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய 05 பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் 150 ஊழியர்கள் விரலடையாளப் பதிவு இயந்திரத்தினைப் பயன்படுத்தி அலுவலகத்திற்கு உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை 2018 ஒக்டோபர் 18 ஆந் திகதி வரை உறுதிப்படுத்திக்கொள்ளவில்லை.

(இ) மாநகர சபையில் பயன்படுத்தப்படும் 79 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களில் 38 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மாநகர சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்காததுடன், 25 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் பாவிக்கமுடியாத நிலையில் சபையால் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது அழித்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் வேலையை விட்டு விலகிய நான்கு ஊழியர்களின் கடன் நிலுவை ரூபா 169,545 தொகையானது 02 தொடக்கம் 10 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாதிருந்தன. இந்நிலுவைத் தொகையினை பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது அவர்களிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ 2018 ஒக்டோபர் 18 ஆம் திகதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

3.2.1 நூலக செயற்பாடுகள்

மாநகர சபையின் கீழ் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய இடங்களில் செயற்பட்டு வரும் பொது நூலகங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் பொருள் கணிப்பீட்டுச் சபையால் சுட்டிக்காட்டப்பட்ட, காணாமல் போன 8,102 நூல் நிலையப் புத்தகங்கள் தொடர்பாக பொறுப்பான நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்முனை பொது நூல் நிலையத்தின் திருத்தவேலைகள் ஒருவருடத்திற்கு மேலாக பூர்த்தியாக்கப்படாததினால் நூலகத்தில் உள்ள இரவல் பகுதியிலுள்ள புத்தகங்கள் உரப் பைகளில் பொதிசெய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு வாசகர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதநிலை காணப்பட்டதுடன் சிறார்களுக்கான பகுதியும் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டிருந்தது.

3.3 ஆளணி முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபையில் எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் வடிகன்களை துப்பரவு செய்வதற்கென நிரந்தரமாக 22 ஊழியர்களும் அமைய அடிப்படையில் 28 ஊழியர்களுமாக 50 சுத்திகரிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 20 நிரந்தர ஊழியர்களும் 07 அமைய ஊழியர்களும் குறித்த வடிகான் துப்பரவுப் பணிகளில் ஈடுபடுத்தப்படாது மாநகர சபையின் அலுவலகம் மற்றும் நூலகம் பிரிவுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) மாநகர சபையில் எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் குப்பைகளை சேகரிப்பதற்கென 57 நிரந்தர ஊழியர்கள் நியமிக்கப்பட்ட போதிலும், 14 ஊழியர்கள் அலுவலகம் மற்றும் ஏனைய பிரிவுக்குள் பணியாற்றுகின்ற நிலையில் 20 அமைய அடிப்படையிலான ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

3.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வங்கியால் மறுக்கப்பட்ட காசோலை

இறைச்சிக் கடை குத்தகைப் பிணைப்பணம் ரூபா 544,154 பெறுமதியான 06 காசோலைகள் 2012 ஆம் ஆண்டு வங்கியில் வைப்புச்செய்யப்பட்டபின் வங்கியால் மறுக்கப்பட்ட போதிலும், இதற்கு பொறுப்பான உத்தியோகத்தர் இது தொடர்பாக எதுவித நடவடிக்கை எடுக்காதிருந்த போதிலும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அலுவலகத்தின் அமைவிடத்தைக் காட்டும் குறிகாட்டிப் பலகை

அலுவலகத்தின் அமைவிடத்தைக் காட்டும் குறிகாட்டிப் பலகையை தயாரித்து பொருத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 123,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஒக்டோபர் 18 ஆம் திகதி வரை குறித்த பலகைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம்

அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிதிகள் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் ரூபா 3 மில்லியன் தொகை நிலையான வைப்புக்கணக்கிலும் ரூபா 2,468,590 தொகை நடைமுறைக்கணக்கிலும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கையடக்கத் தொலைபேசி பாவனைக் கட்டணம்

முன்னாள் மாநகர முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்காக ரூபா 13,011 தொகையான கையடக்கத் தொலைபேசி கட்டணப் பட்டியல்கள் 2015 ஆம் ஆண்டில் இருதடவைகள் செலுத்தப்பட்டுள்ள போதிலும், பணத்தைச் செலுத்தியதற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக இன்று வரை ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு

மாநகர சபை நிதியைப் பயன்படுத்தி ரூபா 124,969 தொகைக்கு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2015 யூன் 30 ஆந் திகதி கல்முனை அல் அமீன் பாடசாலைக்கு ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், அப்பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூலக் கூற்றின்படி அப்பொருட்கள் 2017 செப்டெம்பர் 25 ஆந் திகதி வரை அப்பாடசாலைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மருதமுனை பொது நூலகத்தில் கேட்போர்கூடம் அமைத்தல்

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் நிதியளிப்பின் கீழ் மருதமுனை பொது நூலக கட்டிடத்தை மேலும் விரிவுபடுத்தி கேட்போர்கூடம் அமைப்பதற்காக 2016 நவம்பர் 08 ஆம் திகதி ரூபா 13,131,163 பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இக்கேட்போர்கூடத்திற்கு பெயின்ட் பூசுவதற்காக மாவட்ட கட்டிட அட்டவணை மதிப்பீட்டின்படி (BSR) ஒரு சதுர மீற்றரிற்கு ரூபா 279 விகிதம் மதிப்பிடப்படவேண்டிய போதிலும் பொறியியலாளரினால் ஒரு சதுர மீற்றரிற்கு ரூபா 1,615 விகிதம் மதிப்பிடப்பட்டிருந்ததினால் இவ் வேலைக்காக ரூபா 930,605 தொகையான மிகை மதிப்பீட்டில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தக்காரரினால் 14 குளிரூட்டி இயந்திரங்கள் (Air Conditioner) ஒன்று ரூபா 204,600 விலையில் ரூபா 2,864,400 பெறுமதிக்கு 2016 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுக்கு எழுத்து மூலம் அளிக்கப்பட்ட கூற்றின்படி அதே வகையான அதே வியாபாரக் குறியுள்ள குளிரூட்டி இயந்திரத்தை ஒன்று ரூபா 114,900 விலையில் விநியோகித்து பொருத்துவதற்காக கல்முனை Abans காட்சியறை உடன்பட்டிருந்தது. இதன்படி, ஒப்பந்தக்காரரிற்கு ரூபா 1,255,800 தொகையானது மேலதிகமாக செலுத்தவேண்டி காணப்பட்டிருந்தது.

(எ) கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம்

கல்முனை இஸ்லாமாபாத் சுனாமி வீடமைப்புத்திட்டதின் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம் 2014 ஆம் ஆண்டு ரூபா 4,380,000 செலவில் பூர்த்தி செய்யப்பட்டு தொழிநுட்ப உத்தியோகத்தரின் சிபார்சு மற்றும் பொறியியலாளரின் சான்றுப்படுத்தலின் அடிப்படையில் அனைத்து கொடுப்பனவும், பிடிகாசும் வழங்கப்பட்டிருந்தன. எனினும், கணியப்பட்டியல்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா903,520 பெறுமதியான 9 வேலைகள் ஒப்பந்தக்காரரால் பூர்த்தி செய்யப்படாத போதிலும், அவ்வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதாக சான்றுப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டமை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கல்முனை சுற்றுலா தகவல் மையம் நிர்மாணித்தல்

மீளாய்வாண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் கல்முனை சுற்றுலா தகவல் மைய நிர்மாணவேலையானது 2017 ஏப்ரல் 04 ஆந் திகதி பூர்த்தியாக்கப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சிபார்சு செய்யப்பட்டு ரூபா 2,593,013 செலுத்தப்பட்ட போதிலும், ரூபா 333,000 பெறுமதியான 4 வேலைகள் செய்து முடிக்கப்படாமையினால் இன்று வரை மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவேண்டியிருந்தும், குறித்த நிதிக்கூற்றுக்கள் 06 மாதங்கள் கழித்து 2018 ஒக்டோபர் 12 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் முக்கிய பகுதிகளில் ஒன்றாகிய காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |

| | |
|---|---|
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | i. திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல்<br>ii. திண்மக் கழிவு சேவைக் கட்டண அறவீடு |
| (ஈ) ஆளணி முகாமைத்துவம் | வெற்றிடங்களுக்கான ஆளணிப் பகிர்வு |